# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

| தரம் - 09 | சைவநெறி | நேரம்: 2.30 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

**கவனிக்க:**

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(3) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

1. எந்தக் காரியத்தையும் செய்யத் தொடங்கும் முன் நாம் வணங்கும் முதற் தெய்வம்
   1. சிவன் 2. முருகன் 3. விநாயகர் 4. விஷ்ணு
2. படைத்தல் தொழிலை ஆற்றும் சிவ மூர்த்தம்
   1. பிரமா 2. விஷ்ணு 3. உருத்திரன் 4. மகேஸ்வரன்
3. வாழ்க்கையின் நான்கு படி நிலைகளில் பிரமச்சாரியம் குறிப்பது
   1. துறவுநிலை 2. மாணவநிலை 3. இல்லறநிலை 4. துறவுக்கு ஆயத்தமாகும் நிலை
4. சகிப்புத்தன்மையின் சிகரமாக விளங்கும் மகாபாரதக் கதாபாத்திரம்
   1. அருச்சுனன் 2. தருமன் 3. துரியோதனன் 4. வீமன்
5. அஸ்வினி முதல் ரேவதி வரையிலான இருபத்தேழும் குறிப்பது
   1. கரணம் 2. திதி 3. வாரம் 4. நட்சத்திரம்
6. புரட்டாதி மாதத்தில் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் நவமி வரையான காலத் திதியையுடைய விரதம்
   1. கேதாரகௌரி விரதம் 2. சிவராத்திரி விரதம்
   3. நவராத்திரி விரதம் 4. கந்தசஷ்டி விரதம்
7. சிவபெருமானை நோக்கி அம்பிகையால் அனுட்டிக்கப்பட்டது
   1. ஆடிப்பூர விரதம் 2. கேதாரகௌரி விரதம்
   3. சிவராத்திரி விரதம் 3. நவராத்திரி விரதம்
8. சமணர்களால் கல்லோடு கட்டிக் கடலில் விடப்பட்டபோது நாவுக்கரசர் பாடிய பதிகம்
   1. திருக்குறுந்தாண்டகம் 2. திருநீற்றுப்பதிகம்
   3. நமச்சிவாயப்பதிகம் 4. திருநெடுந்தாண்டகம்
9. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய “பஞ்சாட்சரப் பதிகம்” எத்தனையாம் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது?
   1. முதலாம் திருமுறை 2. இரண்டாம் திருமுறை
   3. மூன்றாம் திருமுறை 4. நான்காம் திருமுறை



kalvi.lk

10. நம்மாழ்வாரால் பாடப்பட்ட பாடல்கள்.
   1. திருவாசிரியம், திருவிருத்தம்
   2. பெரியசிறுமடல், சிறியதிருமடல்
   3. திருப்பாவை, நாச்சியார்திருமொழி
   4. திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம்

11. சிவபக்தியிலும் அடியார் பக்தியிலும் சிறந்து விளங்கிய மங்கையற்கரசியாரை தனது பாடலில் போற்றுபவர்
   1. மாணிக்கவாசகர் 2. சுந்தரர் 3. நாவுக்கரசர் 4. சம்பந்தர்

12. சுந்தரமூர்த்தி நாயனார் திருவெற்றியூர் வீதிவிடங்கப்பெருமானை நினைத்துப் பாடிய பதிகம்
   1. பித்தாப்பிறை சூடி----" 2. பத்திமையும் அடிமையும்------"
   3. மற்றுப்பற்று எனக்கு----" 4. நத்தார்படை ஞானன்பசு----"

13. தலயாத்திரை மேற்கொள்ளப்படும் இந்தியத் திருத்தலங்கள்
   1. காசி, சபரிமலை 2. நல்லூர், சபரிமலை
   3. கதிர்காமம், சபரிமலை 4. நல்லூர், கதிர்காமம்

14. சரியை நெறி நின்று இறையருள் பெற்ற அடியவர்கள்
   1. சம்பந்தர், பூசலார்
   2. பூசலார், சண்டேஸ்வரநாயனார்
   3. சுந்தரமூர்த்திநாயனார், சேரமான்பெருமாள்
   4. நமிநந்தியடிகள், குங்கிலயக்கலயர்

15. "சைவசமயக் களஞ்சியம்" என்ற தொகுப்பிலுள்ள நூல்களை எழுதிய சமயப் பெரியார்
   1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 2. சேர்.பொன்.இராமநாதன்
   3. சைவப்புலவர்.கா.அருணாசலதேசிகர் 4. விபுலானந்த அடிகளார்

16. ஆன்மாவுக்கு நல்லுணர்வு வராமல் அதன் அறிவைத் தடுத்துக் கொண்டிருப்பது
   1. ஆணவம் 2. கன்மம் 3. மாயை 4. ஆகாமியம்

17. ஈழத்தில் சைவத்தின் தொன்மையை விளக்கும் இரண்டாம் சிவாலயம் அமைந்துள்ள இடம்
   1. அநுராதபுரம் 2. பொலநறுவை 3. யாழ்ப்பாணம் 4. திருகோணமலை

18. கட்டுக்கரை செல்வவிநாயகர் ஆலயத்தின் தீர்த்தோற்சவம் இடம்பெறும் தினம்
   1. ஆனிஉத்தரம் 2. ஆடிப்பூரம் 3. மாசிமகம் 4. பங்குனிஉத்தரம்

19. பலாமரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட ஆலயம்.
   1. வண்ணை வரதராஜப்பெருமாள் ஆலயம்
   2. திமிலைதீவு ஸ்ரீமகாவிஸ்ணு ஆலயம்
   3. தாந்தாமலை முருகன் ஆலயம்
   4. மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்

20. "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" எனும் பாடலடி மூலம் உடலோம்புதலின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுபவர்
   1. நாவுக்கரசர் 2. தாயுமானசுவாமிகள் 3. விபுலானந்தஅடிகள் 4. திருமூலர்

(20x2=40 புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி - ii

**முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. இலங்கைத் தமிழ்மக்கள் பயன்படுத்தும் பஞ்சாங்கங்கள் இரண்டின் பெயர் தருக?
2. இறந்த தந்தைக்காக அனுட்டிக்கப்படும் விரதம் யாது?
3. இருக்கு வேதகால மக்களால் வழிபடப்பட்ட தேவர்கள் இருவரின பெயர்களைத் தருக?
4. "மானம்பூ உற்சவம்" இடம்பெறும் திருநாள் யாது?
5. தட்சணாயண காலம் என்றால் என்ன?
6. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?
7. சகமார்க்கம் எனப்படுவது யாது?
8. மாணிக்கவாசகசுவாமிகள் பரிபூரண பக்தியுடன் இறைவன் மீது பாடிய பாடல்கள் எவை?
9. சிதம்பரத் தேர்த்திருவிழாவில் ஒலித்த(இறைவனின்) அசரீரி யாது?
10. நாட்டார் தெய்வங்களைச் "சிறுதெய்வங்கள்" என அழைப்பதற்கான காரணம் யாது?

(10x2=20 புள்ளிகள்)

**02. பின்வரும் திருமுறைப்பாடல்களுள் இரண்டினை,**

1. அடிமுறை பிழையாது எழுதுக.
2. பாடியவர் பெயர், தலம், என்பவற்றைக் குறிப்பிடுக.

அ) காதலாகிக் கசிந்து--------------------"

ஆ) இல்லக விளக்கது----------------"

இ) காப்பதோர் வில்லும் அம்பும்----------"

ஈ) ஏழிசையாய் இசைப்பயனாய்-----------"

உ) போற்றியோ நமச்சிவாய---------" (6+1+1=8x2+16 புள்ளிகள்)

**03. "சிவனடியார்கள் சிவனெனப் போற்றுதற்குரியவர்கள்"**

1. கிரியைப்பணி மூலம் இறைவனை அடைந்த சமயகுரவர் யார்?
2. தேவார முதலிகள் எனப்படுவோர் யாவர்?
3. காரைக்காலம்மையார் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் இரண்டு எழுதுக?
4. சமயகுரவர் நின்ற நால்வகை மார்க்கங்களும் எவை?

(1+3+2+2=8 புள்ளிகள்)

**04. "விரதங்கள் வாழ்வை நெறிப்படுத்த உதவுவன"**

1. விரதம் எனப்படுவது யாது?
2. சக்திக்குரிய நட்சத்திரம் எது?
3. வருட விரதங்கள் இரண்டைக் குறிப்பிடுக?
4. விரதங்கள் அனுட்டிப்பதால் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக?

(3+1+2+2=8 புள்ளிகள்)


kalvi.lk

**05. “சைவத்தின் முடிந்த முடிபு சைவசித்தாந்தம்”**

1. சைவசமயத்தின் சிறப்புநூல் எனப்படுவது யாது?
2. சைவசித்தாந்தம் குறிப்பிடும் முப்பொருள்களும் எவை?
3. ஆணவம் “சகசமலம்” என்று கூறப்படுவதற்கான காரணம் யாது?
4. ஆன்மாவின் இறப்பிற்கும் பிறப்பிற்கும் காரணமாக அமைவது எது?

(1+3+2+2=8 புள்ளிகள்)

**06. “இறைவன் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் இடம் ஆலயமாகும்”**

1. கட்டுக்கரை செல்வ விநாயகர் ஆலயத்தின் மூலமூர்த்தி, அம்பிகையினது பெயர்களைக் குறிப்பிடுக?
2. ஈழத்துச் சிதம்பரம் எனச் சிறப்பிக்கப்படும் ஆலயம் எது?
3. பஞ்சரதங்கள் பவனி வரும் ஆலயங்கள் இரண்டு குறிப்பிடுக?
4. செல்வச்சந்நிதிக் கந்தன் “அன்னதானக் கந்தன்” என அழைக்கப்படக் காரணம் யாது?

(2+2+2+2=8 புள்ளிகள்)

**07. பின்வரும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.**

1. கூட்டுப்பொறுப்பு
2.. யோகம்
3. தலயாத்திரை
4. நாட்டார் வழிபாடு
5. ஆடிப்பிறப்பு

(4+4=8 புள்ளிகள்)

Education கல்வி



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**